Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |
|---|---|

வேணு : 18 | டிசம்பர் 2012 | கானம் : 5



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

Related Websites : www.namadwaar.org Email:contact@namadwaar.org

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 18 | டிசம்பர் 2012 | கானம் : 5

Delivered by India Post www.indiapost.gov.in



மதுரபுரி ஆஸ்ரமம் -ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் திருநக்ஷத்திரம்
திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் நீதியரசர்
ஸ்ரீஅருணாசலம் அவர்களுடன் — 13.11.2012



சிங்கப்பூர் நாமத்வார் திறப்பு (இட-வல) - ஸ்ரீமதி ஹரிலக்ஷ்மி ஜெயச்சந்திரன்,
ஸ்ரீஜெயச்சந்திரன், டாக்டர் பாக்யநாதன்ஜீ, ஸ்ரீபாலசுப்ரமணியன் (மைக்கில்)
-நவம்பர் 8, 2012



சென்னை மாம்பாக்கம் கொளத்தூர் நாகவாஸ்ரமம்
ஸ்ரீயோகிராம்சுரத்குமார் ஆலயம் - 24.11.2012
ஸதகோடி ஸ்ரீராம நாம பிரதிஷ்டை மஹோத்ஸவம்



மலேசிய நாமத்வார் ஸ்ரீப்ரேமிகவரதன்
சன்னதியில் கலிதர்ம உந்தியார் உரை -
டாக்டர் பாக்யநாதன்ஜீ - அக்டோபர் 27,28,29

# நவம்பர் 25, 2012 -ஆம்பூர் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் சத்சங்கம்










நவம்பர் 3,4, 2012 - பாகவத தர்ம Retreat - சியாட்டில், அமெரிக்கா



நவம்பர் 5, 2012 -Joy of Sharing USA
"Life and Soul" Health Fair in Manvel, Tx





மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளிஜீ
சுப்பையா வித்யாலயம் - தூத்துக்குடி - நவம்பர் 8, 2012




ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி - அல்சூர் ஸ்ரீ ஒடுக்கத்தூர் ஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீஸ்ரீராம் பார்த்தசாரதியின் இன்னிசையில் ஸ்ரீஸ்வாமிஜீயின் கீர்த்தனங்கள் 12.11.2012

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 18 டிசம்பர் 2012 கானம் : 5

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

ஒன்றும் செய்யாமல் இருந்து விட்டால், சொர்க்கம் கிட்டி விடும் என்பது உண்மையானால், ஒன்றுமே செய்யாமலே நின்று கொண்டிருக்கும் மலைகளும், மரங்களும் சொர்க்கத்தை அடைய வேண்டுமே! கிடைத்ததை பெற்று வயிற்றை கழுவிக்கொள்வது ஒரு பிறவியை சொர்க்கத்திற்கு இட்டு செல்லுமென்றால், கடலிலே கிடைப்பதை உண்டு வாழும் மீன்களும் சொர்க்கத்திற்கு போக வேண்டுமே! தன்னுடைய இயற்கைக்கு தகுந்தபடி ஒவ்வொரு பிறவியும் நடந்து கொள்ள வேண்டும். செயலை விட்ட மனிதனுக்கு மேன்மை கிட்டாது.

**– சாந்தி பர்வா – மஹாபாரதம் –**

நன்றி -**"மஹாபாரதம் பேசுகிறது"**

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் - 201 | 3 |
| மதுர யாத்திரை | 8 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 12 |
| பாகவத பழம் - 33 | 13 |
| ஸ்ரீசுதர்சன சதகம் | 16 |
| ஆலய தரிசனம் | 30 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 33 |
| ப்ருந்தாவன கண்ணன் | 38 |
| மாலே மணிவண்ணா | 40 |
| அப்பாலுக்கு அப்பால் | 42 |

# ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் கீர்த்தனம்

ராகம் : சௌராஷ்டிரம் தாளம் : ஆதி

ஹனுமனை கண்டீரா! பரம குணவானை கண்டீரா!

1. அஞ்ஜனா புத்ரன் ஹனுமந்தன்
அஞ்சாது நிற்பவன் ஹனுமந்தன்
பஞ்ச முகன் ஹனுமந்தன்
பஞ்சென பறப்பவன் ஹனுமந்தன்
2. பக்தியில் பெரியவன் ஹனுமந்தன்
சக்தியுடையவன் ஹனுமந்தன்
யுக்தி தெரிந்தவன் ஹனுமந்தன்
முக்தி தருபவன் ஹனுமந்தன்
3. தடைகளை தகர்ப்பவன் ஹனுமந்தன்
படைக்கு அஞ்சாதவன் ஹனுமந்தன்
வடைமாலை ப்ரியன் ஹனுமந்தன்
அடையாளம் தந்தவன் ஹனுமந்தன்
4. விண்ணில் பறப்பவன் ஹனுமந்தன்
மண்ணின் மகளை கண்டவன் ஹனுமந்தன்
தன்னிகர் இல்லாதவன் ஹனுமந்தன்
பண்ணில் சிறந்தவன் ஹனுமந்தன்
5. நவாஹம் கேட்பவன் ஹனுமந்தன்
நவ வ்யாகரண பண்டிதன் ஹனுமந்தன்
நவ ஜீவனம் தருபவன் ஹனுமந்தன்
நவ பக்தியின் உருவம் ஹனுமந்தன்
6. ஸகலமும் அறிந்தவன் ஹனுமந்தன்
பகலவன் சீடன் ஹனுமந்தன்
தகவல் தெரிவித்தவன் ஹனுமந்தன்
நகரத்தை எரித்தவன் ஹனுமந்தன்
7. கதையில் சிறந்தவன் ஹனுமந்தன்
கதை கேட்பவன் ஹனுமந்தன்
கீதையும் கேட்டான் முரளீதரனிடம்
கீதையும் கேட்டான் முரளீதரனிடம்

# மதுரமான
# மஹனீயர் - 201

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

நாமமுத்து நகரான தூத்துக்குடியில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மனோரதப்படி, தமிழ்நாட்டில் முதன்முதலாக அழகிய நாமத்வார் ஒன்று அமைந்து, அதில் மாதுரீஸகி ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு நித்ய ஆராதனையும், நாமகீர்த்தனமும் நடைபெற்று வருகிறது. இந்த நாமத்வார் அமைந்ததிலிருந்து இதற்கு திரளான மக்கள் வந்து, நாமகீர்த்தனம் செய்து அரிய பலனையும் பெற்று வருகின்றனர். நாமத்வார் அமைய, பெரும் பங்காற்றியவரும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் பேரன்பு கொண்டவருமான திரு.கதிரேசன் அவர்களை, சத்சங்கத்தில் அநேகமாக எல்லோருக்கும் தெரியும். இவரது மகன் திரு.நேருபிரகாஷும் அவர் மனைவி திருமதி.காஞ்சனாநேருவும் குருநாதரிடம், தங்களுக்கு ஏற்பட்ட மனதை தொடும் அனுபவங்களில் சிலவற்றை, பகிர்ந்து கொண்டனர்.

2003ஆம் வருடம், தீபாவளி நன்னாள், அதிகாலையில் தொலைக்காட்சியில் முதன்முதலாக, குருநாதரின் அருளுரையை கேட்ட இக்குடும்பத்தினர், அவ்வருளுரையால் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். அன்றுமுதல் தினமும் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரைகளை கேட்டு வந்த திரு.கதிரேசன், குருநாதரை பற்றி விசாரித்தறிந்து, அவரை தரிசனம் செய்தும், அவர் உபன்யாசம் நடைபெறும் இடங்களுக்கு எல்லாம் சென்றும் வர ஆரம்பித்தார். தூத்துக்குடி மக்களும், நம் சத்குருநாதரின் பொன்மொழிகளை கேட்டு பயனடைய வேண்டும் என்ற ஆசையினால், குருநாதரிடம் தூத்துக்குடிக்கு விஜயம் செய்ய வேண்டிக்கொண்டார். அவரது வேண்டுகோளை ஏற்று, தூத்துக்குடி சிவன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி, 2004 பிப்ரவரியில் உபன்யாசம் நிகழ்த்தினார்கள். அப்பொழுது, திரு.கதிரேசன் குடும்பத்தார் அனைவருக்கும் குருநாதரின் அருகாமையில் இருந்து தரிசிக்கும் பேறு கிட்டியது.

குருநாதரின் எளிமை, இனிமை, கருணை, பக்தர்கள் குருநாதரிடம் காட்டிய அன்பு, குருநாதர் தம் பக்தர்களிடம் காட்டிய பரிவு, அக்கறை, இவற்றை கண்ணுற்றபொழுது மிகுந்த ஆச்சரியமும், அளவில்லா ஆனந்தமும் அடைந்தார்கள். திரு.கதிரேசன் குடும்பத்தினர், வருடாவருடம் திருப்பதி சென்று, பெருமாளை தரிசித்து வருவர். அந்த திருப்பதி பெருமாள்தான், தங்களை குருநாதரிடம் சேர்ப்பித்து இருக்கிறார் என்று உணர்ந்ததாக சொல்கின்றனர்.

எப்பேர்ப்பட்ட கஷ்டமும் சத்சங்கத்தில் குருவின் அருள் பெற்றவருக்கு தாண்டுவதற்கு வெறும் குளம்படிதான். அவ்வாறு ஒரு சம்பவம் இவர்கள் குடும்பத்தில் நிகழ்ந்தது. 2005 அக்டோபரில் ஒருநாள், திரு.நேருபிரகாஷின் மகன் விகேஷ் வைரவேலின் கண்களில் நீர் வந்து கொண்டே இருந்தது. கண் மருத்துவரிடம் காட்டி, மருந்து ஏதாவது போட்டால் சரியாகி விடும் என்றெண்ணி, சாதாரணமாக இருந்த திருமதி.காஞ்சனா நேருவிற்கு ஓர் அதிர்ச்சி; வைரவேலின் கண்களை பரிசோதித்த மருத்துவர், அவனது வலது கண் Lazy eye என்றும், அந்த கண்ணில் பார்வை திறன் பத்து சதவீதம் மட்டுமே உள்ளது என்றும், 7வயதிற்குள் மட்டுமே இதற்கு ஏதாவது சிகிச்சை செய்ய முடியும் என்றும் கூறினார். அப்போதோ வைரவேலின் வயது 9 ஆகியிருந்தது. இக்கண் நோய்க்கான சிகிச்சை முறை, இன்னும் உலகில் பூரணமாகவும், நிச்சயமாகவும் கண்டறியப்படவில்லை என்றும் மருத்துவர் சொன்னார். அதை கேட்ட திருமதி.காஞ்சனா நேருவிற்கு உடலே சில்லிட்டு விட்டது. இதனால், வீட்டில் உள்ள அனைவரும், மிகுந்த மனவேதனை அடைந்தனர். இதை தாங்கும் பக்குவத்தை, அனைவருக்கும் அருள வேண்டும் என, திருமதி.காஞ்சனா நேரு, ஸ்ரீஸ்வாமிஜியிடம் மனதில் வேண்டி கொண்டார்.

நவம்பர் மாதத்தில், திரு.கதிரேசன், குருநாதரை தரிசிக்க ஆஸ்ரமம் சென்ற போது, பேரன் வைரவேலை பற்றி சொல்லி மிகவும் வருந்தினார். குருநாதர், கதிரேசன் அவர்களிடம் "டிசம்பர் மாதம் பள்ளி விடுமுறை விட்டவுடன், வரச்சொல்" என்று கூறினார்கள். அதன்படி டிசம்பரில் அனைவரும் ஆஸ்ரமம்

சென்றனர். விகேஷ்வைரவேலின் கண் பற்றி விசாரித்த குருநாதர், சில வினாடிகள் கண்களை மூடி பிரார்த்தித்தார்கள். பின்பு வைரவேலின் கையினை பற்றியபடி, "பெருமாளின் அனுக்ரஹம் குழந்தைக்கு நிறைய உள்ளது. பெருமாளின் அருளால் எல்லாம் சரியாகி விடும்" என்று அருளினார்கள். ஆயுர்வேத சிகிச்சையும் எடுத்து கொள்ளும்படி சொன்னார்கள்.

விகேஷ்வைரவேலின் கண் குறைபாடு சம்பந்தமாக, நான்கு பிரபல மருத்துவர்களிடம் காட்டி இருந்தனர். அனைவருமே, இதற்கான சிகிச்சை இல்லை என்றே கூறி இருந்தனர். ஆனால் குருநாதரை ஆஸ்ரமத்தில் தரிசித்து வந்த பின், ஜனவரியில், பரிசோதனையின் பொழுது, வைரவேலிற்கு வலது கண் பார்வைத்திறன், 35 சதவீதத்திற்கும் மேல் முன்னேறி இருந்தது தெரியவந்தது. மருத்துவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். படிப்படியாக பார்வையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. குருநாதர் உத்திரவின்படி, ஆயுர்வேத சிகிச்சையும் செய்தனர். இதன் பின், வைரவேலின் பார்வைத்திறன் 90சதவீதம் மேல் அதிகரித்து விட்டது. சிகிச்சையே முடியாது என்று தெரிவித்த மருத்துவர்கள், பின்னர், இது "கடவுள் கிருபை" என்று ஆச்சரியம் அடைந்தனர். மேலும் 21 வயதான பின், சிறு சிகிச்சை மட்டும் செய்தால் போதும்; கண்ணாடி கூட அணிய தேவையில்லை என்றனர்! வைரவேலின் கண்ணில் ஒளி தந்த கருணாமூர்த்தி, குருநாதர்தான் என்பது, தம்பதிகளுக்கு தெரிந்த விஷயம்தான்!

திரு.நேருபிரகாஷின் தொழில் நடைபெறும் இடத்தில், ஒருமுறை கடலலை போல பிரச்சனைகள் தொடர்ந்து வர, அவர் திணறி போய்விட்டார். அங்கு ஒருமுறை, நம் சத்குருநாதர் சென்று வந்தார்கள். அதன்பின், பிரச்சனைகள் எல்லாம் ஒவ்வொன்றாய், இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன!

2006 ஆகஸ்டில் ஒருநாள், நேருபிரகாஷ் அவர்களின் தாயார் திருமதி.விஜயலட்சுமி, வீட்டில் தனித்திருக்கையில் மயக்கமடைந்து விழுந்து விட்டார்கள். வீட்டிற்கு வந்த நேருபிரகாஷ், சிறிதே திறந்திருந்த ஜன்னலின் வழியே, தம் அன்னை விழுந்து கிடப்பதை கண்டு, துடிதுடித்து போனார். கூப்பிட்டு பார்த்தார். அன்னை பதில் தரவில்லை. கதவை

எப்படியாவது உடைத்தாவது திறக்கலாமா என்றும் யோசித்தார். ஆனால், கதவும் ஜன்னலும் மிக உறுதியாக இருந்திருக்கிறது. உதவிக்கு என்று யாரும் இல்லை. மனதில் பதட்டம் அதிகரித்து கொண்டே இருந்தது. உள்ளே இருப்பது அன்னை அல்லவா? யாருமே உதவிக்கு வர இயலாத சமயத்தில், குருவும் தெய்வமும்தானே துணைக்கு வர முடியும்! நேருபிரகாஷூம் அப்பொழுது மனமுருகி "குருஜி! அம்மாவை எப்படியாவது காப்பாற்றுங்கள்" என்று ஸ்ரீஸ்வாமிஜியை வேண்டினார். உடனே அந்த நேரத்தில் அந்த இடத்திற்கு, ஆசாரி வேலை செய்யும் ஒருவர் யாருமே அழைக்காமல் வந்தார். அத்துடன், திறமையாக கதவை திறந்து கொடுத்தார். உடனடியாக திருமதி.விஜயலட்சுமி மருத்துவமனையில் ICUவில் சேர்க்கப்பட்டார். மருத்துவர், "இன்னும் சிறிது காலம் தாழ்த்தியிருந்தாலும், வாழ்க்கை கேள்விக்குறியாகி இருக்கும்" என்றார்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அன்பர்களிடம் காட்டும் அக்கறை, எப்பொழுதுமே மிக அலாதியாக இருக்கும். ஸ்ரீஸ்வாமிஜிக்கு விஷயம் தெரிவிக்கப்பட்டவுடன், திரு.ஹரியிடம் பிரசாதம் கொடுத்து அனுப்பினார்கள். "குறைந்தது ஒரு வார காலம் ICUவில் இருக்க வேண்டும்; பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்" என்று முதலில் கூறிய மருத்துவர், பிரசாதம் வந்த அன்றோ, "ICUவில் இருக்க அவசியமில்லை; சாதாரண சிகிச்சை எடுத்து கொண்டாலே போதும்" என்று சொல்லி விட்டார்! பிரசாதம் வந்ததில் இருந்து, திருமதி.விஜயலட்சுமி உடல்நிலையில், படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டு, ஆரோக்யமடைந்தார்.

மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை என்பது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் உபதேசிக்கும், மிக எளிமையான மற்றும் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு வழியாகும். இதனால் ஏராளமானோர் பயனுற்றதை நாமறிவோம். பள்ளி பருவத்திலேயே மாணவர்களுக்கு நல்ல விஷயங்களும், மஹாமந்திரமும் சென்றடைய வேண்டும் என்ற சீரிய சிந்தனையினால், மாணவர்களுக்கான கூட்டு பிரார்த்தனை என்பதையும் ஸ்ரீஸ்வாமிஜி ஏற்படுத்தினார்கள். இதனால் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். திருநெல்வேலி, தூத்துக்குடி

மாவட்டங்களில், பல பள்ளிகளில், இக்கூட்டு பிரார்த்தனை, திருமதி.காஞ்சனாநேரு மற்றும் அன்பர்கள் சேர்ந்து செய்து வரும் பணிகளால், மிகவும் சிறப்பாக நடந்து வருகிறது.

2010இல் டிச5ஆம் தேதி, அத்தகைய ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனைக்காக, நானும் ராமுஜியும் தூத்துக்குடி சென்றிருந்தோம். அச்சமயத்தில், நேருபிரகாஷின் தாயார் "குருஜியை தரிசனம் செய்ய ஆசை; ஆனால் எனக்கு முடியவில்லை" என்றார். நான் அவரிடம், "குருநாதரிடம் தங்கள் பிரார்த்தனை ஏதேனும் சொல்ல வேண்டுமா, அம்மா?" என்று கேட்டேன். அதற்கு, "சீக்கிரமாக குருநாதர் திருவடியில் என்னை சேர்த்துக்கொள்ள சொல்லுங்கள்" என்றார். அவர் சொன்னதை சென்னை வந்து, மெதுவாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் தெரிவித்தேன். அதை கேட்ட ஸ்ரீஸ்வாமிஜி, சில நிமிடங்கள் கண்களை மூடியவாறு இருந்தார்கள். 10நாட்களிலேயே, நேருபிரகாஷின் தாயார், ஒரு மலர் உதிர்வதை போன்று, மிக மென்மையாக குருநாதரின் திருவடி சேர்ந்தார்கள். அந்த கடைசி தருணத்தில் குருகிருபையினால், அவரது வாக்கில் பகவன் நாமா வந்தது. குடும்பத்தினர் ஆச்சரியமும் அமைதியும் அடைந்தனர்!

நேரு பிராகாஷிற்கு, திருச்செந்தூர் முருகன்தான் இஷ்ட தெய்வம். அப்படி இருந்த நேருபிரகாஷிற்கும், அவர் குடும்பத்தாருக்கும், இன்று, குருநாதர் இஷ்டதெய்வமாகி விட்டார். இப்படி இந்த அன்பர்கள், குருநாதரை பற்றி சொல்லும் அனுபவங்கள் எல்லாம், முடிவில்லாததவையாக இருக்கிறது. குருநாதரின் கைங்கரியத்தையே பிரார்த்தித்து, அதன்படி வாழ்ந்து வரும் ஒரு அழகிய குடும்பம் இது.

---

முன் அட்டை – திருவிசநல்லூரில் கார்த்திகை அமாவாசை அன்று கங்கையை வரவழைத்த ஸ்ரீஸ்ரீதர அய்யாவாள் அவர்கள்

பின் அட்டை – சிங்கப்பூர் நாமத்வார் திறப்பு 8.11.2012



# விருத்திம் கர்நாடகே கதா – 11

–ராமானுஜம்ஜி

குருநாதர், "வா, கிருஷ்ணன் கூப்பிடுகிறான். பெங்களூருக்கு உடுப்பி வழியாக செல்வோம்" என்றார். அதை கேட்டவுடன், எங்கள் முகங்கள் மனதில் எழுந்த சந்தோஷத்தை அப்படியே வெளிப்படுத்தின. சிற்றுண்டியை வேகமாக முடித்தோம். வழியில் ஸ்ரீஸ்வாமிஜி, உடுப்பியை பற்றி சொல்கையில் எல்லாம், அதை சாஸ்திரத்தில் அன்னப்ரும்ம க்ஷேத்திரம் என சொல்லப்பட்டு இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு வந்தார்கள். வெயிலோ, மழையோ எதுவாக இருந்தாலும், தினமும் இந்த க்ஷேத்திரத்தில் வெகு காலமாக, அன்னதானம், ஏராளமாக வரும் யாத்திரிகர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. கலிகாலமான இக்காலத்திலும் கூட, இப்படி நடைபெறுவது, சாஸ்திரம் இந்த க்ஷேத்திரத்தை அன்னப்ரும்ம க்ஷேத்திரம் என சொல்வதை நிரூபிப்பதாக உள்ளது.

உடுப்பியில் கனகதாசர் என்ற பக்தர் இருந்தார். அவர் தினமும் கண்ணனின் சன்னதியில் மெய்மறந்து பஜனை செய்வது வழக்கம். கோயில் பூஜகர்கள் நீர் கொண்டு வரும் வழியில் மெய்மறந்து பஜனை செய்து கொண்டிருந்தார். வழி இவரால் மறைக்கப்பட்டு இருந்ததால் பூஜகர்கள், அவரை, "இங்கு சன்னதியில் பஜனை செய்ய வேண்டாம்" என்றனர். பஜனையால் சமாதிக்கே சென்றிருந்த கனகதாசர், சமாதி கலைந்த பின், தம் செயலுக்காக வருந்தினார்.

பிறருக்கு நாம் இடையூறாய் ஆனோமே என்று நினைத்து, கண்ணனிடம் வேண்டி கொண்டு, கர்ப்பக்ருஹத்தின் பின்புறமாய் நின்று பஜனை செய்ய ஆரம்பித்தார். ஸ்வாமி கிருஷ்ணனின் கையில், இங்கு தயிர் கடையும் மத்து இருக்கிறது. கனகதாசர் பின்புறம் சென்றவுடன், கண்ணனும் திரும்பி, தன் கையில் உள்ள மத்தாலேயே சுவற்றில் ஒரு போடு போட்டான்.

சுவரில் ஒரு துவாரம் விழுந்தது. அவனால் கனகதாசரை பார்க்காமல் இருக்க முடியவில்லை. சுவரின் துவாரம் வழியாய் "கனகா .. கனகா" என்று கூப்பிட்டான். ஸ்ரீஸ்வாமிஜி கண்ணன் அப்படி கூப்பிட்டதை சொல்லி காண்பித்தது, மிகவும் மனதை தொடுவதாய் இருந்தது. கனகதாசர், அர்ச்சாவதார கண்ணனிடம் வைத்த பிரியமும் எல்லையற்றதாய் இருக்க, பகவானோ தன் பக்தனுக்காக தனது அர்ச்சாவதாரத்தன்மையை மாற்றி கொண்டு, அவனுடன் பேசவும் விளையாடவும் ஆரம்பிக்கிறான்! ஆச்சரியம்!

ஓரிடத்தில் சமைப்பதற்காக விறகுகளாக பயன்படுத்த மரக்கட்டைகள் அழகாக அடுக்கி வைக்கப்பட்டு இருந்ததை பார்த்தோம். அப்படி அடுக்கி வைக்கப்பட்டதே ஒரு பெரிய ரதம் போல் இருந்தது. விறகுதானே அக்னிக்கு வாகனம்! அதனால்தான் அதை வாகனம் போல் அடுக்கி இருந்தார்களோ! ஸ்ரீஸ்வாமிஜி அதை காண்பித்து "அன்னம் ப்ரும்மம்! அன்னம் ப்ரும்மம்!" என்றார்கள். அவர் ஒரு பரவச நிலையில் அப்படி சொல்ல சொல்ல, எங்கள் கைகள் எங்களை அறியாமல் கூப்பின.

ஒரு அழகிய குளத்தை கடந்து கிருஷ்ணர் கோவிலுக்கு சென்றோம். கோவிலில் கூட்டம் அதிகமாக இருந்தது. அதை பார்த்து ஸ்ரீஸ்வாமிஜி, "சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் கூட்டத்தை தாண்டி தரிசனம் செய்ய செல்வது கடினம்" என்றார். அப்படி அவர் சொல்ல சொல்லவே, அங்கு கைங்கர்யபரராக இருந்த நவீன்ஜியின் நண்பர் ஒருவர், ஸ்ரீஸ்வாமிஜியை பார்த்து விட்டார். அவரே, ஸ்ரீஸ்வாமிஜியை கூட்டத்தின் நடுவில் கூட்டி சென்று தரிசனம் செய்வித்தார்.

சன்னதியில் கிருஷ்ணன் தங்க கவசத்துடன் ஸ்ரீஸ்வாமிஜி வருவதை எதிர்பார்த்து இருப்பவன் போலிருந்தான். கண்களில் கிருபையை வர்ஷித்து கொண்டிருந்த கரிய நிறம் கொண்ட அவனை, விளக்குகள் தந்த ஒளியில், இருமுறைக்கும் மேலாக தரிசனம் செய்ய எங்களை ஸ்ரீஸ்வாமிஜி பணித்தார்கள்.

அங்கு ஏராளமான அழகிய சித்திரங்கள் சித்தரிக்கப்பட்டு இருந்தன. அவற்றை பார்த்தார் ஸ்ரீஸ்வாமிஜி. அதில் ஒன்றில் கிருஷ்ணன் யசோதையால் கட்டப்பட்டு இருப்பான். பிள்ளையார்,

கட்டப்பட்ட அந்த கிருஷ்ணனுக்கு, தன் கைகளால் மோதகத்தை கொடுப்பதாக இருக்கும்; அப்படம் கொள்ளை அழகு. இந்த யாத்திரை முடிந்து சுமார் எட்டு மாதங்களுக்கு பிறகு கோபகுடீரத்திற்கான ஒரு புத்தகத்தின் முகப்பில் என்ன ஓவியம் போடலாம் என்று ஸ்ரீஸ்வாமிஜியிடம் கேட்க, அவர், மேற்கண்ட ஓவியத்தைத்தான் போட சொல்லி இருந்தார்கள்.

அதன்பின் தானியங்களும் காய்கறிகளும் வைத்திருந்த கிடங்கிற்கு சென்றோம். அதை பார்த்தவுடன் ஸ்ரீஸ்வாமிஜி தம் கைகளை கூப்பிக் கொண்டார். மறுபடியும் அவர் உதடுகள் "அன்னம் ப்ரும்மம்" என்று முணுமுணுப்பதை தெளிவாக பார்க்க முடிந்தது. என்ன சொல்வது! மஹான்கள் பார்ப்பதை, சாஸ்திரங்கள் சொல்கின்றன. சாஸ்திரங்கள் சொல்வதை, மஹான்கள் பார்க்கின்றனர்.

கோயிலில் பிரசாதம் எடுத்து கொண்டோம். அங்கு வேலை செய்த கைங்கர்யபரர்கள் சுறுசுறுப்புடன் செயல்பட்டதை மிகவும் பாராட்டினார் ஸ்ரீஸ்வாமிஜி. ஹரிஜியை சில ஒலித்தட்டுக்களை வாங்க சொன்னார்கள். அழகிய இனிய அர்த்தங்கள் கொண்ட பதங்களுடன், ஒன்றில் நாட்டுப்புற இசையில் 'பண்டரிபுரா வெம்ப தொட்ட நகரா' என்ற பாட்டு இருந்தது. அதை ஸ்ரீஸ்வாமிஜி பலமுறை கேட்டு மிகவும் ரசித்தார்கள். இது பின்னர் பலமுறை ஸ்ரீஸ்வாமிஜியின் சத்சங்கங்களில் பாடப்பட்டது. உடுப்பியில் இருந்த பல மடங்களின் உள்ளும், மிகுந்த மரியாதையுடன் ஸ்ரீஸ்வாமிஜி சென்று வந்தார்கள். சென்ற பொழுது எப்படி இனிமையாக அமைந்ததோ அப்படியே, திரும்பி வருகையிலும் யாத்திரை இனிமையாக அமைந்தது!

(மதுர யாத்திரை தொடரும்)

---

* ரோஜாவிலும் முள் உள்ளது போல, உண்மையான அன்பிலும் வலி உள்ளது. அந்த அன்புக்கு யார் பாத்திரமாகின்றார்களோ அவர்கள் பயன் அடைகின்றார்கள். அன்பை செலுத்துபவர் தூய்மையாகின்றார்.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: தெய்வத்திற்கோ அல்லது குருவிற்கோ யார் மிகவும் பிரியமானவர்களாக ஆவார்கள்?

பதில்: பொதுவாக இதற்கு எந்த காரணமும் கிடையாது என்பதுதான் உண்மை. ஏதாவது காரணம் சொல்லித்தான் ஆக வேண்டும் என்றால், இப்படி வேண்டுமானால் சொல்லலாம். யாருக்கு அழகாக பழக தெரிகின்றதோ, அவர்கள், அதிக பிரியத்திற்கு பாத்திரமாவார்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

கேள்வி: நான் என் வாழ்வில் பெரும்பகுதியை நாமகீர்த்தனம் செய்யாமல் செலவழித்து விட்டேன். கடந்த சில காலமாகத்தான் நான் நாமகீர்த்தனம் செய்து வருகிறேன். இருப்பினும் எனக்கு எப்பொழுதும் வாழ்க்கையில் கவலையும், பயமும் இருக்கிறது. பல பிறவிகளுக்கு பிறகுதான் ஒருவன் பகவானை அடைகிறான் என்று கேள்விப்படுகிறேன். அப்படி எனில், மஹாமந்திர கீர்த்தனம் செய்த பின்னும், நான் பிறவி எடுக்க வேண்டி இருக்குமா?

பதில்: சென்ற காலத்தை பற்றி நாம் பேசுவது வீண். வரும்காலத்தை பற்றி நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாது. இப்பொழுது இருக்கும் நிகழ்காலம் ஒன்றுதான் நம் கையில் இருக்கிறது. எதிர்காலத்தை பற்றி ஆராய்ந்து, நிகழ்காலத்தை ஏன் வீணடிப்பானேன்? இப்பொழுது நாமகீர்த்தனம் செய்து வருவோம். மறுபிறவி என்ற அவசியம் அப்பொழுது தேவைப்படாது.

**6TH YEAR MAHAMANTRA MASS PRAYER FOR STUDENTS APPEARING FOR BOARD EXAMS AT KAMARAJAR ARANGAM, TEYNAMPET ON 5TH JANUARY 2013, 10AM - 1PM - BY GOD INDIA TRUST**



# பாகவத பழம்

**பாகம் 2 – அத் 1G**

–ஸ்ரீஸ்வாமிஜி (33)

பரீக்ஷித் தன் நாட்டின் எல்லைக்குள், கலிபுருஷன் புகுந்துவிட்டதை, அறிந்துகொண்டான். படைகளை அழைத்துக் கொண்டு, கலிபுருஷனை அடக்கப் புறப்பட்டான். செல்லும் வழியில் உள்ள அரசர்களை வென்று கப்பம் பெற்றான். செல்லும் வழிகளில் பல மஹரிஷிகளின் ஆஸ்ரமத்தைக் கண்டான்.

எந்த ஒரு ரிஷியின் ஆஸ்ரமத்தைக் கண்டாலும், படைகளை தூரத்தில் நிறுத்திவிட்டு, தான் ஒருவனாக இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு பணிவுடன் சென்று சேவிப்பான். ஒவ்வொரு மஹரிஷியும் அவனைக் குளிர, குளிர கடாக்ஷித்து ஏதாவது அவனுடன் ப்ரேம சல்லாபம் செய்வார்கள். "உன்னுடைய தாத்தாவான அர்ஜுனனுக்கு பகவான் வாஸுதேவனே தேர் ஓட்டினான் தெரியமா? நீ யாராவது சொல்லி கேள்விப்பட்டிருக்கின்றாயா? அப்பொழுது உன் தாத்தா, நான் யுத்தமெல்லாம் செய்யமாட்டேன் என்று பின்வாங்கினார். அப்பொழுதுதான் பகவான் கீதோபதேசம் செய்தான். அதைத்தான் பிரஸ்தானத்ரயத்தில் ஒன்றாக நாங்கள் இன்றும் பாராயணம் செய்து வருகின்றோம்'' என்றார்கள்.

மற்றொரு மஹரிஷி, "அந்த மஹரிஷி தேர் ஓட்டினதைத்தான் சொன்னாரா, பகவான் அந்தத் தேரின் குதிரைகளை தானேதான் குளிப்பாட்டுவான். ஏனென்றால், பகவானுக்கு அர்ஜுனனிடம் மட்டும் அபிமானமில்லை. அர்ஜுனனுடைய குதிரைகள் என்று அதன்மேலும் ஒரு தனி அபிமானம் என்றால் பார்த்துக் கொள்ளேன்'' என்றார். இவைகளையெல்லாம் கேட்கும் பரிக்ஷித்தின் மனோநிலை எப்படி இருந்திருக்கும்!

மற்றொரு ரிஷியோ, "உன்னுடைய பாட்டி திரௌபதி

பட்ட துன்பம்போல் உலகத்தில் எந்தப் பெண்ணும் பட்டிருக்கமாட்டாள். படவும்கூடாது. அப்பப்பா! என்ன கொடுமை. பாபிகள் அவளை சபையில் மானபங்கப்படுத்தப் பார்த்தார்களே. பகவான் மட்டும் இல்லை என்றால் பாண்டவர்களுடைய கதி என்ன?'' என்று கூறினார். இதை அவர் சொல்லும்பொழுது உணர்ச்சி மேலிட்டு இப்பொழுது நடப்பது போல் நினைத்து, துரியோதனாதிகளை சபித்து, பாண்டவர்களை நினைத்து, கண்ணீர் வடித்தார். இப்படி பல ரிஷிகள் மூலம் வேதவேத்யனான பகவான் தன்னுடைய குடும்பத்தில் குருவாக, தெய்வமாக, உறவினனாக, நண்பனாக, வேலைக்காரனாக, தூதுவனாக இருந்ததையெல்லாம் சொல்லக்கேட்டு திகைத்து கண்ணீர் வடித்துப் புரண்டு அழுதான். அவனால் ஒரு நிலைக்கு வர முடியவில்லை. வீரன்தான். ஆனாலும் என்ன செய்ய முடியும்! மற்றவர்களுக்கோ, அது புண்ணியத்தைத் தரும் தெய்வத்தின் கதை. அவனுக்கோ, அவனுடைய குடும்பக் கதை. தான், தன் தாயான உத்தரையின் வயிற்றில் இருந்தபொழுது அஸ்வத்தாமா பிரம்மாஸ்த்ரம் விட்டதையும், அபலையான அவன் தாய் சர்வ ஜீவன்களுக்கும் ஒரு புகலிடமான பகவானை சரணாகதி செய்ததையும் கேட்டான். பிரம்மாஸ்திரத்திற்கு பிரதி போடக் கூடாது என்ற நியதியையும் மீறி, ஸுதர்ஸனச் சக்கரத்தை பிரயோகம் செய்து, தன்னை ரக்ஷித்த பகவானை நினைத்தான். கண்ணீர் விட்டான். பகவானுக்கு தான் என்ன பிரதி செய்யப்போகின்றோம் அல்லது செய்துவிட முடியும் என்று நினைத்தான். மஹரிஷிகள் சொன்ன கதைகள் அவன் மனதில் நிரம்பியிருந்தன. அந்த மஹரிஷிகளுக்கு, உயர்ந்த மனமுடைய பரீக்ஷித், உயர்ந்த வஸ்திரங்கள், விலையுயர்ந்த மாலைகள், ரத்தினங்கள் எல்லாம் கொடுத்தான்.

பிறகு கைகூப்பி அவர்களை ஸேவித்து எழுந்து நின்ற பரிக்ஷித்தைப் பார்த்து சந்தோஷப்பட்ட மஹரிஷிகள், "உனக்கு பொன், பொருள், போகம், ஆயுள், பதவி, புகழ் என்ன வேண்டும் கேள். எங்களால் எதை வேண்டுமானாலும் உனக்குத் தரமுடியும்'' என்றனர்.

ஆனால், பரிக்ஷித்தோ அவர்களைப் பார்த்து பணிவுடன்,

"இப்பொழுது உங்கள் மூலமாக என் அப்பா, தாத்தாக்களைப் பற்றிக் கேட்டேனே. அவர்களைப் போல், நானும் தர்மத்திலிருந்து இம்மி அளவு கூட விலகாதவனாகவும், வாஸுதேவனிடத்தில் அஸஞ்சலமான பக்தியுடையவனாகவும் இருக்க ஆசீர்வதியுங்கள்'' என்று வேண்டி நின்றான். மஹரிஷிகள், "உன்னைத்தவிர, வேறு யார் இப்படிக் கேட்பார்கள்'' என்று அவனைக் கொண்டாடி ஆசீர்வதித்தார்கள். "அவர்கள் கருணையுடன் ஆசீர்வதித்து விட்டார்கள். நானும் அதுபோல் உறுதியுடன் இருப்பேன், இருக்க வேண்டும்'' என்று த்ருடமாக சங்கல்பித்துக் கொண்டான் பரீக்ஷித். அப்பொழுது, ஒரு ஆச்சரியமான காட்சியைப் பார்த்தான். தர்மதேவதை ஒரு காலால் மிகவும், கஷ்டப்பட்டு நடந்து கொண்டிருந்தது. பூமியோ, பசு ரூபத்தில் இருந்தது. அந்த பூமி (பசு) மங்களம் இழந்து, அழுதுகொண்டிருந்தது. அதைப் பார்த்த தர்மதேவதை, பின்வருமாறு கேட்கலாயிற்று.

குழந்தாய்! உடல் ஆரோக்கியம் சரியில்லையா?' மன வேதனையில் தவிக்கின்றாயா?' தூர தேசத்தில் இருக்கக்கூடிய உறவினர்களைப் பற்றி சிந்திக்கின்றாயா?' ஒரு காலால் நிற்கின்ற தர்மமான, என்னைப் பற்றி கவலைப்படுகின்றாயா?'

ராஜ வம்சத்தில் வராதவர்கள், உன்னை ஆள்கின்றார்களே என்று வருத்தப்படுகின்றாயா?' தேவர்களின், அவிர்பாகங்களை அபகரிப்பது குறித்து வருத்தப்படுகின்றாயா?' மழையே பெய்யாத பூமியைப் பற்றி கவலைப்படுகின்றாயா?'

கணவன், குழந்தைகள் இவர்களால் கைவிடப்பட்ட பெண்களைப் பற்றி வருந்துகின்றாயா?' அரக்கர் போன்ற சிலர், குழந்தைகளை பலவிதத்திலும் துன்புறுத்துவதைப் பார்த்து வருந்துகின்றாயா?

வெறுக்கத்தக்க பல செயல்களைச் செய்யும் பிராம்மணர்களிடத்தில், வேதம் உள்ளதே என்று வருந்துகின்றாயா? பிரும்ம ஞானம் இல்லாத அரசர்களிடம், அவர்கள் இடும் இழிவான வேலைகளைச் செய்ய வரும், பிரும்ம ஞானிகளைப் பற்றி வருந்துகின்றாயா?

கலிபுருஷனால் பீடிக்கப்பட்ட க்ஷத்திரியர்களை நினைத்து வருந்துகின்றாயா? அப்படிப்பட்டவர்களால் அழிக்கப்பட்ட ராஜ்ஜியத்தை நினைத்து வருந்துகின்றாயா?

நேரம், இடம், செய்யத்தக்கது, செய்யத்தகாதது, என்ற பாகுபாடு இல்லாமல் மக்கள் உண்பதிலும், குடிப்பதிலும், நீராடுவதிலும், உடை உடுத்துவதிலும், ஆண் பெண்ணுடன் சேருவதிலும், வெட்கமில்லாமல்லாலும் ஈடுபடுகின்றார்களே என்று கவலைப்படுகின்றாயா?

பூமியின் பாரத்தைக் குறைக்க வந்த பகவான் கிருஷ்ணன், மறைந்ததை நினைத்து வருந்துகின்றாயா?

தாயே! தேவர்களாலும் பூஜை செய்யப்படக்கூடிய நீ இன்று மனோவியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துவதன் காரணம் என்ன?'' என்று கேட்டு முடித்தது தர்மதேவதை.

(கனியும்)


*புதிய வெளியீடு* – ***மதுரஸ்மரணம்***

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன் அன்பர்களின் அனுபவங்களை முதன்முதலாக தமிழில் பாக்யாஜி ஆஸ்திரேலியாவில் பேசிய ஒரு முழுமையான வீடியோ தொகுப்பு.

**Contact: MADHURAM Stall, Chennai +914423727400/ +919442613710**



# ஸ்ரீ ஸுதர்சந சதகம்



(நவம்பர் இதழ் தொடர்ச்சி)

-ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது

**95. சோம்பல் ஒழிய**

சுக்லச் சக்ர! ஸ்தவஸ்தே ஸஹ தஹந
கலாம் கால! தேடயம் ந கால:
கிம்வோ ரக்ஷாம்ஸி ரக்ஷா
தவ பலது பதே! யாதஸாம் பாதஸேவா,
வாயோ! ஹ்ருத்யோஸிஸபர்த்துஸ் த்யஜ
தநத! மதம் ஸேவ்யதாம் த்ரியம்பகேதி
ப்ராஹுர் யத்யந்த்ரபாலாஸ் ஸ தநுஜவிஜயீ
ஹந்து தந்த்ராலுதாம் வ: ॥95॥

**96. துக்க நிவர்த்திக்காக**

காயத்ரியர்ணார சக்ரே ப்ரதமமநுஸக
ஸ்மேரபத்ராரவிந்தே
பிம்பம் வ ஹ்நேஸ் த்ரிகோணம் வஹதி
ஜயிஜயா த்யஷ்டசக்தௌ நிஷண்ணா
சோகம் வோ அசோகமூலே
பதஸவித லஸத் பீமபீமாக்ஷபீமா
பும்ஸோ திவ்யாஸ்த்ரதாமா புருஷஹரிமயீ
மூர்த்திரஸ்யத்வ பூர்வா ॥96॥

**97. கீர்த்தி பரிமளிக்க**

பாஸ்ச்சாத்யாசோக புஷ்பப்ரகரநிபதிதை:
ப்ராப்தராகம் பராகை:
ஸந்த்யாரோசிஸ் ஸகந்தை: ஸ்வபதசசதரம்
ப்ரேக்ஷ்ய தாராநுஷக்தம்
பத்மாநாபத்த கோசாநிவ ஸுரநிவஹை:
அஞ்ஜலீந் கல்ப்யமாநாந்
சக்ராதீசோபிநந்தந் ப்ரதிசது ஸ்த்ருசீம்
உத்தமச்லோகதாம் வ: ॥97॥

**98. ஸம்ஸார பயம் அகல**

ரக்தாசோகஸ்ய வேதஸ்ய ச நிஹிதபதம்
ப்ராப்தசாகஸ்ய மூலே
சக்ரை ரஸ்த்ரைஸ் ததாத்யைரபி
மஹிதசதுர் த்விச் சதுர்பாஹூ தண்டம்,
ஆஸீநம் பாஸமாநாம் ஸ்திதமபி பயதஸ்
த்ராயதாம்தத்வமேகம்
பச்சாத் பூர்வத்ர பாகே
ஸ்புடதரஹரி நாமாநுஷம் ஜாநுஷாத்வ: ॥98॥

**99. உள்ளொளி பெருக**

ப்ராணே தத்தப்ரயாணே
முஷிததிசி த்ருசி த்யக்தஸாரே சரீரே
மத்யாம் வ்யாமோஹவ த்யாம் ஸதமஸி மநஸி
வ்யாஹதே வ்யாஹ்ருதே ச
சக்ராந்தர்வர்தி ம்ருத்யுப்ரதிபயம்
உபயாகாரசித்ரம் பவித்ரம்
தேஜஸ் தத் திஷ்டதாம் வ: த்ரிதசகுலதநம்
த்ரீக்ஷணம் தீக்ஷ்ணதம்ஷ்ட்ரம் ॥99॥

**100. திருவாழியின் திருவருள் பூரணமாக கிடைக்க**

யஸ்மிந் விந்யஸ்ய பாரம்
விஜயிநி ஜகதாம் ஜங்கமஸ்தாவராணாம்
லக்ஷ்மீநாராயணாக்க்யம்
மிதுநம நுபவத்யத்புதாராத் விஹாராந்,
ஆரோக்யம் பூதிமாயு, க்ருதமிஹ பஹூநா
யத்யதாஸ்த் தாபதம் வ:
தத்தத் ஸத்ய: ஸமஸ்தம் திசது
ஸ புருஷோ திவ்யஹேத்யக்ஷவர்த்தீ ॥100॥

**101. திருவாழியின் திருவருள் பூரணமாக கிடைக்க**

பத்யாநாம் தத்வ வித்யா த்யுமணி
கிரிச வீத்யங்க்கஸங்க்யா தராணாம்
அர்ச்சிஷ்யங்கேஷூ நேம்யாதிஷூச
பரமத: பும்ஸி ஷட்விம்சதேச்ச

சங்கை: ஸெளதர்சநம் ய: படதி
க்ருதமிதம் கூரநாராயணேந
ஸ்தோத்ரம் நிர்விஷ்டபோகோ
பஜதி ஸ பரமாம் சக்ர ஸாயுஜ்யலக்ஷ்மீம் ॥101॥

**சுபம்**

---

ஒருவன் நிறைய கடன் வாங்கி இஷ்டம் போல செலவழித்து விட்டு கடன் கொடுத்தவன் திரும்பி வந்து கேட்கும்பொழுது, பணம் என்பது ஒரு அச்சடித்த காகிதம் அதை போய் திரும்பி கேட்டு, இவ்வளவு தொந்திரவு செய்கின்றாயே! என்று சொல்வது எப்படியோ, அது போன்றதுதான், உலக வாழ்க்கையில் மூழ்கி இருக்கும் ஒருவன் அத்வைத வேதாந்தம் உபன்யாசம் செய்வது.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

---

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
website: www.rajmanibuilders.com
ADVT

# ஆம்பூரில் ஒரு நாம வேள்வி

– திரு.குமரேசன் &
திரு.மோகன்குமார்

மதுரபுரி ஆஸ்ரமத்தில், செப்டம்பர் 26 ஏகாதசி அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை தரிசனம் செய்ய சென்றிருந்தோம். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், மழைக்காக ஆம்பூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில், செப்டம்பர் 29 பௌர்ணமி முதல் 48நாட்களுக்கு மஹாமந்திர கீர்த்தனம் செய்ய உத்திரவும் ஆசியும் தந்தார்கள்.

நாமகீர்த்தனம் துவங்கிய அன்றும், மறுநாளும் நல்ல மழை. நவம்பர் 1ஆம் தேதியன்று பாலாற்றில் வெள்ளமே வந்து விட்டது. தினமும் காலை 6மணி முதல் மாலை 6மணி வரை, இந்த நாமவேள்வி 576மணி நேரம் நடைபெற்றது. ஆம்பூர், குடியாத்தம், பெரியான்குப்பம், பல்லலகுப்பம், ராமாபுரம், கம்மகிருஷ்ணபள்ளி, துத்திப்பட்டு, மாச்சம்பட்டு, முக்குன்றம், மிட்டாலம், களப்பாடி, வெங்கடாபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து அன்பர்கள் வந்து, நாமகீர்த்தனத்தில் கலந்து கொண்டார்கள்.

இதில் 4631 அன்பர்கள் கலந்து கொண்டு, ஒரு கோடியே இருபது லக்ஷத்து நாற்பத்தி இரண்டாயிரத்து முன்னூற்று அறுபது முறை நாமம் சொன்னார்கள். குருநாதர் அருளால் அழகாய் நடந்து முடிந்த இந்த நாமவேள்வியின்பொழுது, ஆம்பூரில் 48 மணி நேரம் 40 நிமிஷம் மழை பொழிந்தது. நவம்பர் 15அன்று நாமவேள்வி பூர்த்தி அடைந்தது. பூர்த்தியன்று, ஆம்பூர் அன்பர் குழுவினர் திருப்பதிக்கு சென்று, ஏழுமலையான் கோவில் மாட வீதிகளில் நாமகீர்த்தனம் செய்தனர்.

நவம்பர் 25 அன்று, குருநாதரின் ஜெயந்தியை முன்னிட்டு, ஆம்பூர் ஸ்ரீனிவாசபெருமாள் கோவிலில் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனமும், 1500அன்பர்களுக்கு சிறப்பான அன்னதானமும் செய்யப்பட்டது. மாலையில் திரளான அன்பர்கள் முன், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசம் நடைபெற்றது. நாம வேள்வியில் பூரணமாய் கலந்து கொண்ட அன்பர்களுக்கு, தம் திருக்கரங்களால், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிரசாதம் வழங்கினார்கள்.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவம்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திர வைபவத்தை ஒட்டி, அன்பர்கள் தமிழகத்தின் பல இடங்களிலும், நாமத்வார் மையங்களிலும், உலகின் பல பாகங்களிலும், அகண்டமாய் நாமகீர்த்தனமும் அன்னதானமும், சமூக சேவையும் செய்தனர். பல மையங்களில் விசேஷ உபன்யாசங்களும், பாராயணமும், ப்ரார்த்தனைகளும், கலைநிகழ்ச்சிகளும் ஒருவாரகாலத்திற்கும் மேலாக நடைபெற்றன.

அனைத்து நாமத்வார் மையங்கள், கருணை இல்லங்கள், குழந்தைகள் காப்பகங்கள், முதியோர் - ஆதரவற்றோர் இல்லங்கள், சிறுவர் நல பள்ளிகள், கண் பார்வை அற்ற - காது கேளாதோர் பள்ளிகள், மனநலம் பாதிக்கப்பட்டோர் இல்லங்கள், பொது இடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், கோவில்களிலுமாக பல இடங்களில் மிக விமரிசையாக ஏராளமானோருக்கு அன்பர்களால் அன்னதானம் செய்யப்பட்டது. சில இடங்களில் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது; குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள், விளக்கு பூஜை இடம் பெற்றன; அன்பர்கள் பள்ளி சிறார்களுக்கு புத்தாடை வழங்கினர்.

நூற்றுக்கும் மேல் அன்பர்கள் நாமத்வார்களிலும், நாம கேந்திரங்களிலும், இல்லங்களிலும் காலை முதல் மாலை வரை அகண்டமாயும், சில மையங்களில் ஒரு வாரம் முழுமையாகவும் மஹாமந்திர கீர்த்தனம் செய்தனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களையும் பாடினர். பெங்களூர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் சன்னதியில் சதுர்வேத பாராயணமும், அல்சூர் ஸ்ரீஒடுக்கத்தூர் ஸ்வாமிகள் மடத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களும் இடம் பெற்றது.

அன்பர்களின் அன்னதானம், சேவை மற்றும் நாமகீர்த்தன விபரங்களை கேட்டு, ஸ்ரீஸ்வாமிஜி மகிழ்ந்து, அன்பர்களுக்கு சகல மங்களங்களையும் அருள, பகவானை ப்ரார்த்திப்பதாக சொன்னார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு பிடித்தமான நாமகீர்த்தனமும், சேவையும் செய்த அன்பர்களை, மதுரமுரளி நன்றியுடன் நமஸ்கரிக்கிறது.

## *சிங்கப்பூரில் ஸ்ரீப்ரேமிகவரதன்*

ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன் நவம்பர் 8, 2012 அன்று சிங்கப்பூரில் டாக்டர்.பாக்யநாதன்ஜி மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் திவ்ய சன்னதியுடன், நாமத்வார், திறந்து வைத்தார். இது, மலேசியா, ஆஸ்திரேலியாவிற்கு அடுத்தபடியாக பாரதத்திற்கு வெளியே ஸ்ரீப்ரேமிகவரதனின் சன்னதி அமையும் மூன்றாவது இடமாகும். ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாணைப்படி, காலையில் பாக்யாஜி ஸ்ரீப்ரேமிகவரத திவ்ய தம்பதிகளுக்கு கங்கை நீரால் திருமஞ்சனம் செய்தார். பாகவத தசம ஸ்கந்த பாராயணமும், மஹாமந்திர கீர்த்தனமும் திரளான பக்தர்களால் செய்யப்பட்டது. அன்று சிங்கப்பூரில் கடுமையான வெயில் காணப்பட்டது. பாகவதத்தில் க்ருஷ்ணனின் அவதார கட்டத்தில் மேகங்கள் மூண்டதை போல, நாமத்வாரில் தசமஸ்கந்த பாராயணத்தின் பொழுது பகவானின் மகிழ்ச்சிக்கு அடையாளமாக, மேகங்கள் சூழ்ந்து, அப்பொழுது சிங்கப்பூரில் நல்ல மழை பெய்தது.



இவ்விழாவில் ஸ்ரீ ஜெயச்சந்திரன் - ஸ்ரீமதி ஹரிலக்ஷ்மி ஜெயச்சந்திரன் தம்பதிகள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நாமத்வாரை துவக்கி வைத்தனர். குருநாதர் அருளாலும், நாமத்வார் தலைவர் ஸ்ரீபாலசுப்ரமணியன், ஸ்ரீமதி உமா பாலசுப்ரமணியன் மற்றும் சிங்கப்பூர் அன்பர்கள் குடும்பங்களின் கூட்டு முயற்சியாலும், இந்த வைபவம் சிறப்பாய் நடந்ததென பாக்யாஜி பேசினார்.

பிறகு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதிவு செய்யப்பட்ட அருளுரை ஒளிபரப்பப்பட்டது. அன்பர்கள் அனைவரும் கேட்டு மகிழ்ந்தனர். ஸ்ரீஸ்வாமிஜியின் பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் சிங்கப்பூர் அன்பர்கள் தவிர, மலேசிய, ஆஸ்திரேலிய, இந்தோனேசிய, இந்திய அன்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

நவம்பர் 9 அன்று பாக்யாஜி சிங்கப்பூர் கெய்லாங்க் சிவன் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "கலியையும் பலி கொள்ளும்" மஹாமந்திர கீர்த்தனையை பற்றி விளக்கமாக எடுத்து பேசினார். மிக எளிமையாக அமைந்திருக்கும் இந்த கீர்த்தனை, எப்படி கலிசந்தரண உபநிடதத்தில் உள்ள நாமத்தின் பெருமையை ஆழமாக பறைசாற்றுகிறது என்றும், உலகளாவிய சகோதரத்துவம் மலர எப்படி நாமகீர்த்தனம் இன்றியமையாதது என்றும் பேசினார். நவம்பர் 10 அன்று சிவன் கோவிலில், கோபகுடீர குழந்தைகளின் "எது உண்மையான பிரார்த்தனை" என்கிற நாடகமும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களும் இடம்பெற்றன.

முன்னதாக அக்டோபர் 26, 27, 28 தேதிகளில் மலேசிய நாமத்வாரில் பாக்யாஜி, ஸ்ரீப்ரேமிகவரதனின் சன்னதியில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "கலி தர்ம உந்தியார்" குறித்து ப்ரவசனம் நிகழ்த்தினார். இதில் எப்படி கலி தர்ம உந்தியார் எல்லோருக்கும் எக்காலத்திற்கும் மிகவும் ஏற்ற உபதேசத்தை தருகிறது என்பது குறித்து பேசினார். நாமத்வார் அன்பர்கள் தங்களது நாமானுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

# GOD INDIA CLEANUP DAY - NOV 4

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைக்கிணங்க சென்ற வருடம் போலவே காட் இந்தியா டிரஸ்ட் அன்பர்கள் நவம்பர் மாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையை (நவ 4) CLEANLINESS IS GODLINESS என கொண்டாடினர். இதில் கலந்து கொண்ட அன்பர்கள், சென்னை மெரீனா கடற்கரை மற்றும் அந்தந்த ஊரில் உள்ள பிரதான பழமை வாய்ந்த கோவில்கள், கிராம கோவில்கள், நகர வீதிகள், முனிசிபல் தெருக்கள், முதியோர் இல்லங்கள், பூங்காக்கள் என பல்வேறு இடங்களில் தூய்மைப்படுத்தும் பணியில் ஒன்றாக இணைந்து செயல்பட்டனர். திரளான மக்கள் ஆதரவும், இப்பணியை கண்ட வெளிநாட்டினரும் கூட இதில் பங்கு கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வயது வித்தியாசமின்றி சகலரும் இப்பணியில் ஈடுபட்டதை பார்க்க முடிந்தது. வாசகர்கள் இதன் மிக விபரமான படங்களையும் செய்திகளையும் காட் இந்தியா இணைய தளத்தில் பார்க்க முடியும்.




சென்னையில் அண்ணாநகர் - கோவூர்- பட்டினப்பாக்கம்- குரோம்பேட்டை - கொடுங்கையூர் - மாதவரம் - காசிமேடு காலனி, ஆவடி, திருமுல்லைவாயில், சிங்கபெருமாள் கோவில், கூடுவாஞ்சேரி, அணைக்கட்டு, காஞ்சிபுரம், கடலூர் பாதிரிகுப்பம், திருச்சி, திருவானைக்காவல், மதுரை, சிவகாசி, தூத்துக்குடி, குடியாத்தம், ராணிப்பேட்டை, வளசை, களப்பாடி, பழனி, தஞ்சாவூர், தர்மபுரி, அம்பாசமுத்திரம், பாப்பான்குளம், ரவணசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி, வத்தலகுண்டு, விருதுநகர், உடுமலைப்பேட்டை, பாலக்காடு, அலகடேதரா, கோவில்பட்டி, அருப்புக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, பெரியகுளம், அம்போர்நாத் மற்றும் பல ஊர்களை சேர்ந்த காட் இந்தியா டிரஸ்டு அன்பர்கள் ஏராளமானோர் உற்சாகமாக கலந்து கொண்டு சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

## Our products

Globe Tipper | Unit Converter | Smart Alarm Pro | DRACO, The Dragon




## Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

**For any Business Related Enquiry email us at contact@vapssky.com**

நம்முடைய மனது, "நாம் எவ்வளவோ புண்ணிய செயல்களும் நல்ல செயல்களும் செய்துள்ளோமே, அதனுடைய பலன் நமக்கு வரவில்லையே! எப்பொழுது வரும்?" என்று நினைக்கின்றது. அப்படி நினைக்கும்பொழுதே, "நாம் செய்த பாவ செயல்களோடு அதன் பலனும் வரத்தானே செய்யும்" என்பதை நம் மனது, வசதியாக மறந்து விடுகின்றது என்பதுதான் வியப்பு.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப்புதிர் பகுதி 45 - விடைகள்- ஆத்ரேயன்

1. 7 - 44 - 651 - 2198
2. 20 - 5977
3. ரிக் - ஐதரேய ப்ராஹ்மணம், சுக்ல யஜுஸ் - சதபதப் ப்ராஹ்மணம், கிருஷ்ண யஜுஸ் - தைத்ரீய ப்ராஹ்மணம், சாமவேதம் - அஷ்டப் ப்ராஹ்மணம், அதர்வணவேதம் - அதர்வ ப்ராஹ்மணம்
4. யக்ஞேஸ்வர தீக்ஷிதர் - சந்திரகுணா, மஹாநதிக் கரையில் அமைந்துள்ள ஜயமங்களம் - பூர்வ மீம்மாஸை சபர பாஷ்யத்திற்கு ப்ருஹத் டீகா, மத்யமடீகா, டுப்டீகா என்று மூன்று உரைகள் எழுதி இருக்கிறார்
5.,யதுவம்சத்தின் உட்பிரிவான சாத்வத வம்சத்தில் ஸ்வபல்லக் இவரது தந்தை ; அம்மா காந்தினி ; இவரது மனைவி சுதனு - காஹுகரின் புத்ரி
6. திரௌபதி - சதானீகன்; கரேணுமதி - நிர்மித்ரன்
7. நகுலனுக்கு
8. திரௌபதி - ஸ்ருத சேனன், விஜயா - சுஹோத்ரன்
9. துஷ்யந்தனின் பேரன், பரதனின் பிள்ளை - சுனந்தாவின் மகன் (இவர் காசி ராஜாவின் பெண்)
10. வேடுவர்கள் அரசனான ஹிரண்யதனுவின் பிள்ளை. ஸ்ரீக்ருஷ்ணனால் கொல்லப்பட்டதாக தெரிகிறது (துரோண, உத்யோக, மௌசல பர்வா)

# ஆலயம் தொழுவது
# சாலவும் நன்று -8



திரு.எஸ்.ராஜப்பன்

மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேச நரஸிம்ஹ பெருமாள் கோவிலில் மாத புனர்பூச நக்ஷத்திர தினங்களில், இராமபிரானுக்கு விசேஷ திருமஞ்சனம் செய்யப்பட்டு, உட்பிரகாரத்தில் புறப்பாடு செய்யப்படுகின்றது. ஸ்ரீராமநவமி உத்ஸவம் 10 நாட்களுக்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இத்திருக்கோயிலுக்கு தை மாதத்தில் ஒரு நாள் திருவல்லிக்கேணியிலிருந்து ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாளும், ஆனி மாதத்தில் ஒரு நாள் மைலாபூரிலிருந்து ஸ்ரீஆதிகேசவப் பெருமாளும் எழுந்தருளி சேவை சாதிக்கிறார்கள்.

இக்கோயிலின் ப்ரகாரத்தில் ஸ்ரீசக்கரத்தாழ்வார் சன்னிதி அமைந்துள்ளது. முன் மண்டபத்தில் சேனைமுதலியார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், உடையவர், மணவாளமாமுனிகள் எழுந்தருளியுள்ளார்கள். இத்திருக்கோயில் காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இத்திருக்கோயில் எம்பெருமான்களை சேவித்துவிட்டு, நாங்கள் நமது ஸ்வாமிஜியின் திருக்கமலப் பாதங்களில் சாஷ்டாங்கமாக சேவித்துவிட்டு, அவரது அன்புக்கட்டளையை எதிர்ப்பார்த்து நின்றோம். மறுநாள், அதாவது 10.01.2012 அன்று எங்களை மேற்கு முகப்பேரில் உள்ள ஸ்ரீசந்தான ஸ்ரீநிவாஸப் பெருமாள் கோயிலுக்கு சென்று பெருமாளை சேவித்துவிட்டு வரும்படி ஸ்ரீகுருநாதர் பணித்தார்.

நாங்கள் 10.01.2012 செவ்வாய்க்கிழமை காலை முகப்பேருக்குப் புறப்பட்டுச் சென்றோம். மேற்கு முகப்பேர் பேருந்து நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிற்குள் வெள்ளாளர் தெருவில் ஸ்ரீசந்தான ஸ்ரீநிவாசப் பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் சுமார் 170

ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீஅருணாசல முதலியார் என்னும் பக்தரால் கட்டப்பட்டது. இவ்வடியாருக்குச் சொந்தமான நிலத்தடியில் தாம் இருப்பதாக பெருமாள் இவரது கனவில் தோன்றிக் கூறியுள்ளார். இம்மெய்யடியாரும் தமது நிலத்தைத் தோண்டி அங்கு ஸ்ரீசந்தான ஸ்ரீநிவாசப் பெருமாளின் திவ்ய மங்கள விக்கிரகம் இருப்பதைக் கண்டு இன்புற்று, பகவானுக்கு அவ்விடத்திலேயே கருங்கல்லால் ஒரு சிறிய கோயிலை நிர்மாணம் செய்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்தார். இப்பெருமாள் தன்னிடம் வந்து பிரார்த்தனை செய்யும் சந்தான பாக்யம் இல்லாத தம்பதியருக்கு சந்தான பாக்கியத்தைத் தந்தருளுகிறார். எனவே இப்பகுதி முன்பு "மகப்பேறு" என்றே அழைக்கப்பட்டதாகவும், காலப்போக்கில் திரிபுற்று முகப்பேர் என்று தற்போது அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு மூலவர் ஸ்ரீசந்தான ஸ்ரீநிவாசப் பெருமாள் சுமார் 9அடி உயரத்தில் திருகாட்சியளிக்கின்றார். ஸ்ரீசந்தான லக்ஷ்மி தாயார், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீவீர பக்த ஆஞ்சனேயர், ஸ்ரீகருடாழ்வார், ஸ்ரீவிநாயகர், ஸ்ரீஐயப்பன் மற்றும் நவக்ரஹ சன்னிதிகள் இத்திருக்கோயிலில் உள்ளன. ஸ்ரீஅருணாசல முதலியாரின் வாரிசுதாரர்கள் இன்றளவும் இத்திருக்கோயிலில் நிர்வாகத்தைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

இத்திருக்கோயிலில் ஸ்ரீசந்தான கோபாலனின் திவ்ய மங்கள விக்கிரகம் உள்ளது. இங்கு பௌர்ணமி தினத்தன்றும் மற்றும் திருவோணம், புனர்பூசம், ஸ்வாதி, ரேவதி நக்ஷத்திர தினங்களிலும் சந்தான கோபால பூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது. சந்தான பாக்கியம் வேண்டிவரும் தம்பதியர்கள் இப்பூஜையில் கலந்துகொண்டு பயனடைந்து வருகின்றனர். இப்பூஜை காலை 6 மணி முதல் காலை 11 மணி வரை நடைபெறுகின்றது. தகுதியுடைய அர்ச்சகர்களைக் கொண்டு தினப்படி பூஜை, முறைப்படி நடத்தப்பட்டு வருகின்றது. இத்திருக்கோயிலில் எம்பெருமாளை சேவித்துவிட்டு, மனநிறைவுடன் திரும்பினோம். ஸ்ரீஸ்வாமிஜியின் திருவடிகளை வணங்கி, அவரது உத்தரவை எதிர்நோக்கிக் காத்திருந்தோம்.

(தொடரும்)

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting  Private Limited

# பாலகர்களுக்கு ஒரு கதை



## விசுவாசத்தின் மேன்மை

மகாபாரதத்தில் அனுசாசன பர்வத்தில் விசுவாசத்தின் மேன்மை பற்றி ஒரு கதை உள்ளது. பாலகர்களே! அந்த கதையை இப்பொழுது நாம் பார்ப்போம்.

காசி ராஜாவுடைய தேசத்தில் ஒரு பெரிய காடு இருந்தது. காடு என்றால் அடர்ந்த மரங்களும், பலவிதமான மிருகங்களும் இருப்பது இயற்கைதானே? காட்டில் எப்பொழுதுமே நிறைய வேடர்கள் குடும்பத்துடன் வசித்து வருவார்கள். காட்டில் ஒருநாள் வேட்டையாடிக்கொண்டு இருந்த வேடன், ஒரு அம்பை எடுத்து விஷத்தில் நன்றாக தோய்த்தான். விஷம் தோய்ந்த அந்த அம்பை ஒரு விலங்கின் மீது குறி பார்த்து செலுத்தினான். அது, குறி தவறி, அங்கிருந்த ஒரு பெரிய மரத்தின் மீது பதிந்து விட்டது. அந்த அம்பில் விஷம் தோய்ந்து இருந்ததால், அந்த மரம் பாதிக்கப்பட்டது . அதனுடைய இலைகள், காய்கள், பழங்கள் எல்லாமே உதிர்ந்து போய் விட்டன. அந்த மரம் எல்லாவற்றையும் இழந்து நின்றது. அதில் கூடு கட்டி இருந்த பல பறவைகளும் வேறு மரம் தேடி சென்றன, இப்படியிருக்கையில், அதில் ஏற்கனவே வசித்து வந்த கிளி மட்டும் அந்த மரத்தை விட்டு பறந்து செல்லாமல், அதிலேயே தங்கி இருந்தது. இந்திரன் இதை கவனித்தான். அவனுக்கு அது மிகவும் வியப்பாக இருந்தது. இந்த மரம் விஷத்தினால் பாதிக்கப்பட்டு, பட்டு போய் விட்டது. இதில் இருந்த பறவைகளும் வேறு மரங்களை நாடி சென்று விட்டன. அப்படி இருக்கையில், இந்த கிளி மட்டும் ஏன் இந்த மரத்திலேயே தங்கி உள்ளது என்பது, அவனுக்கு மிகவும் வியப்பை அளித்தது.

இந்திரன் மனித உருவை எடுத்து கொண்டான். அவன் அந்த கிளியை பார்த்து "பட்டு போன இந்த மரத்தை நீ ஏன் விடாமல் இருக்கின்றாய்? இலைகள், கனிகள் என்று உனக்கு

வேண்டிய எதுவுமே இல்லாத இந்த மரத்தினால், உனக்கு ஒரு பயனும் இல்லை. இந்த காட்டில் பூத்து குலுங்குகிற கனிகளுடன் பல மரங்கள் உள்ளன. நீ அங்கு சென்று வசிக்கலாமே? ஏன் இங்கு இருக்கின்றாய்" என்று கேட்டார்.

அதற்கு அந்த கிளி பதில் சொல்ல ஆரம்பித்தது. "இந்த மரத்தில்தான் நான் பிறந்தேன்; வளர்ந்தேன். என்னுடைய இளமை பருவத்தில் இந்த மரம் பெரும் பாதுகாப்பை தந்தது. இதனுடைய பழங்களை தின்று நான் உயிர் வாழ்ந்தேன். எனக்கு அடையாளம் தந்ததே இந்த மரம்தான். அப்படி இருக்க இதற்கு ஒரு கெட்ட காலம் வந்த பொழுது, இதை விட்டு வேறு இடம் சென்று விட, என் மனம் இடம் தரவில்லை. நல்ல நிலையில் இருந்தபொழுது, அதை அண்டி பிழைத்த நான், அது கெட்ட நிலைக்கு வந்தவுடன், அதை விட்டு ஓடி விடுவது எனக்கு முறையானதாக படவில்லை" என்றது.

அந்த பதிலால் மிகவும் மகிழ்ச்சி அடைந்த இந்திரன், அந்த கிளியை ஒரு வரம் கேட்க சொன்னான். அந்த கிளியோ, அந்த மரம் செழித்து பழைய நிலையை அடைவதையே வரமாக கேட்டது. கிளி இப்படி ஒரு வரம் கேட்டவுடன், இந்திரன் ஆச் சர்யம் அடைந்தான். தான் அடைந்த மகிழ்ச்சியினால், அந்த மரத்தையும் செழிக்க வைத்து கிளிக்கும் அருள் புரிந்தான்.

விசுவாசமுள்ளவன் தானும் வாழ்ந்து, தான் யாரை அண்டி இருக்கின்றானோ, அவர்களையும் வாழ வைக்கின்றான். இதனால்தான் விசுவாசம் என்பது, மனித குணங்களில் மிகவும் மேம்பட்ட ஒன்றாக பார்க்கப்படுகின்றது.

---

**நவம்பர் 5, 13, 14** தேதிகளில் Joy of Sharing Trust சார்பாக அமெரிக்காவில் Naperville Public Library **chicago**, Intel Campus, **Hudson, MA &** Best Buy in **Minneapolis, MN** ஆகிய இடங்களில் ராமுஜி Youth Leadership Workshopகளை நிகழ்த்தினார். மிக பெரிய நிறுவனங்களில் இருந்து பல பொறியியல் வல்லுனர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**நவம்பர் 10 - 18 ஸ்ரீமத்ராமாயணம்** - சென்னை அண்ணாநகர் திரு.பலராமன் அவர்கள் இல்லத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீமத்ராமாயண உபன்யாசம் நிகழ்த்தினார்கள். தினமும் திரளான அன்பர்கள் வந்து, சிரவணம் செய்து குருவருளும் திருவருளும் பெற்று சென்றனர்.

**நவம்பர் 24** - சென்னை மாம்பாக்கம் கொளத்தூர் **ஸ்ரீராகவாஸ்ரம**த்தில் நடைபெற்ற **சதகோடி ஸ்ரீராம நாம பிரதிஷ்டை மஹோத்ஸவத்தில்** கலந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

**அமெரிக்க நாட்டில் சத்சங்கங்கள் - அக்டோபர் 23-26** - milwaukee இல் ராமானுஜம்ஜி பல அன்பர்கள் இல்லங்களில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் "கலி தர்ம உந்தியார்", பாகவதம், நாமசங்கீர்த்தனம், பகவத் சேவை ஆகிய தலைப்புகளில் அழகாக பேசினார்.

**அக்டோபர் 27** Minneapolis இல் குருநாதருடன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் குறித்து மதுரஸ்மிருதி என்ற தலைப்பில் அமெரிக்காவின் பல பாகங்களிலிருந்து வந்திருந்த அன்பர்கள் முன் ராமானுஜம்ஜி பேசினார். **அக்டோபர் 28-30 -** minneapolis இல் கிருஷ்ணலீலா என்ற தலைப்பில் பாதுகா ப்ரவேசம், தசமஸ்கந்த பாராயணம், பாகவத உபன்யாசம், கோவிந்த பட்டாபிஷேகம், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்கள் ஆகியன ராமானுஜம்ஜி முன்னிலையில் நடைபெற்றது.

**நவம்பர் 3 -** Seattle இல் தீபோத்ஸவ் என்ற தலைப்பில் ராமானுஜம்ஜி முன்னிலையில் குழந்தைகளுக்கான அழகான கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இதில் chime a rhyme இல் மஹாமந்திரத்தை இனிமையாக பாடுவதும், குட்டிகிட்டாவில் தீபாவளி கதையை பப்பட் நிகழ்ச்சியாகவும், ஹனுமானின் கதைகளை குழந்தைகளுக்கு சுலபத்தில் கொண்டு செல்லும் விதமாகவும் அமைத்து இருந்தனர். இதில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களையும், பாகவத சுலோகங்களையும் குழந்தைகள் அழகாக பாடினர். **நவம்பர் 3,4 -** Seattle இல் Bhagavatha Dharma Retreat ராமானுஜம்ஜி முன்னிலையில்

நடைபெற்றது. இதில் பாகவத பக்த கதைகள், ப்ரேமிகவரதனின் அஷ்டோத்திரம், கஜேந்திர ஸ்துதி, குருநாதருடன் அனுபவங்கள், திவ்யநாமம் ஆகியன இடம் பெற்றிருந்தன. **நவம்பர் 7 வரை** Seattle இல் ராமானுஜம்ஜி பல அன்பர்கள் இல்லங்களில் சத்சங்கங்களை நிகழ்த்தினார்.

**நவம்பர் 8 – 11** Chicago- ராமானுஜம்ஜி அன்பர்கள் இல்லங்களில் நாமமஹிமை மற்றும் குருமஹிமை குறித்து சத்சங்கங்களை நிகழ்த்தினார். **நவம்பர் 9** Naperville Public Library chicagoவில் அவர் முன்னிலையில் கோபகுடீர குழந்தைகள் நிகழ்ச்சி இடம்பெற்றது. இங்கு Art of Spiritual Parenting என்ற தலைப்பில் ராமானுஜம்ஜி பேசியது அனைவருக்கும் பிடித்து இருந்தது. ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரத்தை ஒட்டி, அமெரிக்காவில் பத்துக்கும் மேற்பட்ட நகரங்களில் பல இடங்களில் அன்பர்கள் ஒன்றாய் கூடி அகண்ட நாம கீர்த்தனமும் சமூகசேவையும் சத்சங்கங்களும் நிகழ்த்தினர்.

**நவம்பர் 12 மாலை** Boston பாதுகாதாமத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திவ்யசரித்திரம் மற்றும் ஸ்ரீஸ்வாமிஜி மேற்கொண்டுள்ள திவ்ய பணிகள் குறித்தும் நரகஹரசதுர்த்தசியான தீபாவளி வைபவம் குறித்தும் ராமானுஜம்ஜி சத்சங்கம் நிகழ்த்தினார். **நவம்பர் 13** Bostonஇல் ப்ரேமிகவரதன் பாராயண மண்டலியில் விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணத்தின் மேன்மை குறித்து ராமானுஜம்ஜி பேசினார்.

**நவம்பர் 5** – Joy of Sharing டிரஸ்ட், அமெரிக்கா "Life and Soul" என்ற ஒரு பெரிய Health Fair நடத்தியது. Honorable Mayor Delores Martin of Manvel city துவக்கி வைத்த இதில், பலருக்கு, மிக பிரபல மருத்துவர்கள், பலவிதமான சிகிச்சைகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனைகள் செய்து, ஆலோசனைகளும் தந்தனர்.

**நவம்பர் 2012 மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை** - **தூத்துக்குடி** மற்றும் **திருநெல்வேலி**யில் 15க்கும் மேற்பட்ட பள்ளிகளில் சுமார் 6000மாணாக்கர்கள் முன்பாக, முரளிஜி, "வாழ்வில் வெற்றி பெறுவது எப்படி?" என்பது குறித்து பேசி, மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனையை நிகழ்த்தினார்.

கண்ணபிரான் துணை

மஹாரண்யம்

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி





அவர்களின் அருளாசியுடன்

# சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா

வழங்கும் 6-ஆம் ஆண்டு

# தெய்வத் தமிழ் இசை விழா





**21.12.2012 முதல் 27.12.2012 வரை**

நேரம் : மாலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை

இடம் : மஹோதயா ஹால் (ஜவஹர் வித்யாலயா பள்ளி)

#36, 4வது அவின்யூ, அசோக் நகர், சென்னை - 600 083.

**துவக்க விழா : 21.12.2012 - வெள்ளிக்கிழமை மாலை 7 மணி**

விழாவைத் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றுபவர் : நீதியரசர் திரு T.S. அருணாசலம் அவர்கள்

தலைவர், பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமம் திருவண்ணாமலை

| தேதி | நிகழ்ச்சி & வழங்குபவர்கள் |
|---|---|
| 21.12.2012 | **மங்கள இசை - தமிழ் கீர்த்தனங்கள்**<br>திரு. M.P. பாலசந்தர் & திரு. M.P. பாலமுருகன் குழுவினரின் நாதஸ்வரம் |
| 22.12.2012 | **நாடகமே!/இயலிசையே! பட்டிமன்றம்** - நடுவர் முனைவர் அ. அறிவொளி |
| 23.12.2012 | **பக்தி நாடகம் 'திருநாவுக்கரசர்'** நடித்து வழங்குபவர் மாஸ்டர் ஸ்ரீதர் |
| 24.12.2012 | ஊத்துக்காடு **ஸ்ரீ வெங்கடகவியின் கீர்த்தனங்கள்**<br>புல்லாங்குழல் : திரு. J.A. ஜெயந்த் |
| 25.12.2012 | சத்சங்க குழந்தைகளின் **'வள்ளி கல்யாணம்'** நாட்டிய நாடகம் |
| 26.12.2012 | **விநாயகர் அகவல்/அபிராமி அந்தாதி /திருவாசகம்**<br>சீர்காழி திரு. சா. திருஞானசம்பந்த ஓதுவார் & குழுவினர் |
| 27.12.2012 | மஹாரண்யம் **ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் தமிழ் கீர்த்தனங்கள்**<br>செல்வி ஸ்ரீரஞ்ஜனி சந்தானகோபாலன் |

மேலும் விபரங்களுக்கு :

**சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திரா**

#51, 7வது அவின்யூ, அசோக் நகர், சென்னை – 600 083

போன் : +91 44 – 2489 5875 செல் : +91 94426 13710

E.Mail : contact@namadwaar.org

Related Websites : www.namadwaar.org / www.madhuramurali.org

**அனைவரும் வருக!**

**அனுமதி இலவசம்!**

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஹித ஸந்த்தாஸ் பாபாஜி- 2

சித்ரகூடத்து ஜகதேவ்தாஸ்ஜீ ப்ருந்தாவனத்து ஸந்த்தேவ்தாஸ் பாபாவை காண அவா கொண்டு விசாரித்தபடியே மதன்டேர் எனும் இடம் வந்தடைந்தார். அங்கு ஒரு உயரமான பாபா அவரை ப்ரஸாதம் ஸ்வீகரித்த பின்னர் ஸந்த்தாஸ்ஜீயிடம் அழைத்துச் செல்வேன் என்றார். இல்லை பாபா! நான் முதலில் ஸந்த்தாஸ்ஜீயை தரிசித்த பின்னரே ப்ரஸாதம் எடுத்துகொள்வேன் என்று கூறியவாறே, மஹந்த் எழுந்து கொண்டார்.

ஆனால் பாபாவோ விடுவதாக இல்லை. கையை பிடித்து பலவந்தமாக அவரை அமரச் செய்தவாரே வினயத்துடன் அவர் மஹாராஜ்! அவ்வாறு கூறாதீர்கள்! ஏதோ எனது அதிர்ஷ்டவஸமாக, நான் முன் செய்த புண்யத்தின் பாக்யோதயமாக இன்று உங்களை தரிசிக்கும் பேற்றை பெற்றுள்ளேன். நீங்கள் எனது ஸேவையை ஏற்காமல் சென்றால் எனது மனம் பெரும் வேதனையை அடையும். நீங்கள் முதலில் ப்ரஸாதம் ஸ்வீகரித்து கொள்ளுங்கள். பின் நான் உங்களை ஸந்த்தாஸ் பாபாவை தரிசிக்க அழைத்துச் செல்கிறேன் என்று மன்றாடினார். மஹந்த்ஜீயால் இதை மறுக்க முடியவில்லை. அவர் அங்கேயே அமரும்படியாயிற்று. ப்ரஸாதமும் ஸ்வீகரிக்கும்படியாயிற்று.

ப்ரஸாதம் எடுத்து கொண்ட பின்பு, பாபாவின் மற்றொரு அன்பு கோரிக்கையை எதிர்கொள்ள நேர்ந்தது. பாபா அவரிடம் நீங்கள் சிறிது நேரம் படுத்துக்கொள்ளுங்கள். நான் உங்களுக்கு பாத-ஸேவை செய்கிறேன். ஸந்த்தாஸ் பாபாவை பார்த்ததாகவே எண்ணுங்கள். அவர் அருகிலேயேதானே இருக்கிறார் என்று ஒரு கட்டிலை போட்டபடியே கூறினார்.

இதற்குள் பாபாவின் ஸேவையினால் மஹந்த்ஜி மிகவும் நெகிழ்ந்துவிட்டார். அவர் கூறும் எதையுமே, இவரால் மறுக்க முடியவில்லை. அவர் கட்டிலில் படுத்துக் கொண்டார். பாபா அவரது கால்களை பிடித்து விடலானார். சிறிது நேரத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அங்கு நிறைய ஸாதுக்கள் கூடிவிட்டார்கள். பாபா ஒரு புது ஸாதுவிற்கு சரண ஸேவை செய்வதைக் கண்டு அவர்களின் ஒருவர் ஆவலுடன் இந்த மஹாத்மா யார் பாபா என்று வினவினார்.

"இவர்தான் சித்ரகூடத்தைச் சேர்ந்த மஹந்த் ஸ்ரீஜகதேவ்தாஸ்ஜீ".

இவர் இங்கு எப்படி வந்தார்?

மஹந்த்ஜீ தானே இதற்கு விடையளித்தார் ப்ருந்தாவனத்தை தரிசனம் செய்ய வந்தேன். ஸந்த்தாஸ் பாபாவை பற்றி பெரிதும் கேள்விபட்டிருந்தேன். அவரை தரிசனம் செய்துவிட்டு செல்லலாம் என்று வந்தேன். விசாரித்து கொண்டே வந்த கொண்டிருந்தபோது இந்த பாபாவின் ப்ரேம வலையில் அகப்பட்டுகொண்டேன். இப்பொழுது இந்த வலையிலிருந்து மீண்டால்தான் என்னால் ஸந்த்தாஸ்ஜீயை தரிசிக்கவே முடியும்!

அந்த ஸாது, புன்னகைத்தவாறே, முதலில் பாபாவை பார்த்தார், பின்பு மஹந்தை பார்த்தார். பாபா, தனது சிரிப்பை பெருமுயற்சியுடன் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார். அந்த ஸாது, அப்பொழுது உங்களுக்கு இவ்வளவு நேரம் சரண ஸேவை செய்து கொண்டிருந்தவர்தான் ஸந்த்தாஸ் பாபா! அவர் உங்களை நன்கு ஏமாற்றியிருக்கிறார் என்றார். இதை கேட்ட மாத்திரத்தில், மஹந்த் சட்டென்று எழுந்து, பாபாவை தழுவிகொண்டார். அவர் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. மேலும் அவர் கூறலானார் "பாபா ! நான் உங்களை பற்றி எதை கேள்விபட்டேனோ, அதை இன்று நேராக கண்டேன். உங்களுடைய தரிசனம் பெற்று நான் இன்று தன்யனானேன். ஸாதுக்களுக்கு ஸேவை செய்கிறவர்களில் உங்களை போல் இன்னொருவரை காணவே முடியாது!" என்றார். "அப்படியெல்லாம் கூறாதீர்கள். தங்களை போல் ஸாது ஸேவை செய்யமுடியவில்லையே என்று எனக்கு வருத்தம்" என்றார் பாபா. (தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 113*



–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

திருமாலை பற்றிய ஐந்தாம் (பரிபாடல் 13ஆம் பாடல்) பாடலையும், அதன் திரண்ட பொழிப்பினையும் இனி காண்போம்.

### *திருமாலை வணங்குவோர் பெரும்பேறு*

நீலமலை மேல் ஊர்ந்து வருகின்ற இளஞாயிறு போலும் அழகிய பீதாம்பரத்தையும், அலங்கரிக்கப்பட்ட முடியையும், மலையிலிருந்து இறங்கும் பொன்மணிகளைச் சுமந்து வரும் அருவியின் நிறத்தோடு உவமை கொள்ளும் சிறந்த மாலையையும், கருடப்பறவை எழுதிய கொடியையும் உடையவனாய், ஆகாயத்தின் கண் இருந்து உலகிற்கு அளித்தல் தொழிலை உடைய முழுமதியின் குளிர்ச்சி போலக் குளிர்ச் சியான அருளுதல் தொழிலைக் கொண்டவனும், அசுரரை வருத்தும் தன்மை உடைய சக்கரப் படையை உடையவனும் ஆகிய திருமாலே !

கார்ப்பருவத்து இருண்ட மேகத்தின் இருபாலும், ஆகாயம் சூரிய சந்திரர்களை அணிந்து நின்றார் போலச் சக்கரத்தையும், சங்கையும் ஏந்திய திருக்கரங்களுடன், மின்னலைப் போல விளங்கும் வீரசங்கிலியும், அருவி வீழ்தலைப் போல விளங்கும் முத்தாரத்தையும் அணிந்துள்ள நின் அழகிய திருமார்பையும் தொழுவோர்க்கு, உனக்கு உரிமையாகப் பொருந்திய வைகுண்டமும் உரியதாகின்றது.

### *திருமால் எங்கும் எல்லாமும் ஆய் நிற்கின்ற தன்மை*

அசுரரை அழிக்கும் போரில் வல்ல தலைவனே ! சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலாகிய புலன்களும் நீ ; அவற்றை நுகரும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளும் நீயே. இப்படிக் கூறப்படும் புலன்கள் ஐந்தனுள் ஒன்றாகிய ஓசையால் அறியப்படும் ஆகாயமும் நீயே; ஓசையாலும் பரிசத்தாலும் அறியப்படும் காற்றும் நீயே; ஓசையாலும்

பரிசத்தாலும் ஒளியாலும் உணரப்படும் நெருப்பும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை என்பனவற்றால் உணரப்படும் நீரும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்தினாலும் அறியப்பெறும் நிலமும் நீயே. ஆதலால் மூலப்பகுதியும் அறமும் அநாதியான காலமும், ஆகாயமும், காற்றும், கனலும் கூடிய இம்மூவேழ் உலகமும், உலகத்துண்டான உயிர்கள் எல்லாமும் நின்னிடத்து உளவாயின.

### *பல்வேறு திருஉருவத்துடன் விளங்கும் ஒரு முதல்வன்*

திருப்பாற்கடல் நடுவே ஆயிரந்தலைகளை உடைய ஆதிசேடன் மேல் அறிதுயில் செய்யும் துளவ மாலை அணிந்த திருமாலும், படைவலியுடனே ஒழுக்கத்தைக் கடந்துவரும் வலிமிக்க போரைச் செய்யும் பகைவர் உயிரை அகற்றி, அவர் மார்பை உழும் கலப்பைப் படை உடைய பலராமனும், பூமியானது நடுக்கம் அற அதனைக் கொம்பின் மேல் எடுத்துக் காத்தருளிய ஆதிவராகமும் ஆகிய மூன்று திருஉருவங்களாகப் பிரிந்து நலம் செய்யும் தனி முதல்வன் நீயே ! (தொடரும்)


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)

Consultant in Endocrinology, Diabetes & Metabolism

Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New No. 228, old No. 169, R.K.Mutt Road,

Mandaveli, Chennai - 600 028

(Next to Ravi Pharmacy)

Ph - 044 - 24950090, Mob - 9840488777

ADVT

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் - 10

பசவர், வீட்டிற்கு செல்லாமல், ஊர் பஞ்சாயத்துக்கு போனார். அங்கே எந்த நோயாளி மனிதனை சேரியில் பார்க்க சென்றிருந்தாரோ, அவனும் அவன் மனைவியும் பசவர் காலில் விழுந்து "அய்யா! நீர் என்னை தொட்டபொழுது, என் உடம்பில் ஒரு மின்சாரம் அடித்தது போல் உணர்ந்தேன். உடம்பில் ஒரு சக்தி புகுந்து கொண்டது. மருந்துக்கு அவசியமே இல்லாமல் என் உயிரை காப்பாற்றினீர்" என்றான். பசவர் சிவன் கோவிலை காட்டி "அதோ பார்! அந்த இறைவன் செய்த கிருபை இது. அவனுக்கு நன்றி தெரிவி. நீ உன் வீட்டிற்கு சென்று ஓய்வெடு. இங்கு இருக்க வேண்டாம்" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

அதே சமயம் மதிராஜர் வந்தார். அவரிடம் பசவர் "அப்பா! நான் வீட்டிற்கு வரவில்லை. வந்தால் உங்களுக்கு தர்மசங்கடம் ஆகும். என்னை கூடல சங்கமம் கூட்டி செல்ல ஏற்பாடு செய்யுங்கள். என் வாழ்க்கை என் குருவோடு இணைந்தது" என்றார். பசவர் இரவோடு இரவாக அக்கா நாகம்மாளுடன் கூடல சங்கமம் வந்து சேர்ந்தார். நேராக ஈசான்ய குருவை பார்க்க போனார். குரு அவரை வரவேற்று "வா பசவா! நீ வருவாய் என்று எனக்கு தெரியும். நாகம்மாள் மாமனாரை வரவழைத்து நானே அவளை வீட்டிற்கு அனுப்புகிறேன். அவளை பற்றி கவலை வேண்டாம். நீ என்னுடன் இரு" என்று சொல்லி விட்டார்.

அக்காலத்தில் கூடலசங்கமத்தில் பெரிய பல்கலைக்கழகமே ஈசான்யகுருவின் நிர்வாகத்தில் இருந்தது. ஈசான்யகுரு பசவருக்கு கரதலத்தில் சிவலிங்க பூஜை, பஞ்சாக்ஷர ஜப மேன்மை மற்றும் ஆன்மீக நுணுக்கங்களை சொல்லி தந்து, நந்தியை குருவாக கொள்ளவும் போதித்தார். ஈசான்யகுரு, பசவருக்கு பல பொறுப்புகளை தந்து அவரை பலவிதத்திலும் வளர்த்தார். ஆகம சாஸ்திரம், உபநிடதங்கள், வானியல் சாஸ்திரம், கணிதம், ஜோதிடம், இலக்கணம்,

இலக்கியம், மருத்துவம், சங்கீதம், நாடக பயிற்சி, புராணம் போன்றவற்றை பெரிய வித்வான்களை கொண்டும், நடைமுறை வாழ்க்கை கல்வி, பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கை முறை, வணிகம், ராஜாங்கத்தில் பழகும் விதம் என்று பல பாடங்களையும் தானே முன்னின்றும் பசவருக்கு கற்று கொடுத்தார். பசவரை ஈசான்யகுரு பல மக்களிடம் பழக செய்வார். பசவரும் ஏன் எதற்கு என்று கேட்காமல் அனைத்தையும் ஆர்வமுடன் கற்றார். அங்கு ஏற்கனவே இருந்த பல வித்வான்களும், சேவகர்களும் பசவரின் செயலாற்றும் திறன், பழகும் விதம் கண்டு மகிழ்ந்து மிக்க நட்பு கொண்டனர்.

ஈசான்யர் பசவரிடம் "நீ நல்ல மாற்றங்களை மக்களுக்கு போதிப்பாய். அதற்கு எதிர்ப்பு இருக்கும். ஆனால் உனக்கு இறைவன் துணை நிற்பான். உன்னை தேடி பல மஹாத்மாக்களும் வருவர். நீ சமுதாயத்தில் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணுவாய். பல அருட்கவிதைகளை இயற்றுவாய்" என்பார். அது பின்னாட்களில் உண்மையானது. (தொடரும்)

**சனாதனப் புதிர் : பகுதி – 46** –ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில்)

1. சகுனியின் சகோதரன் பெயர் என்ன? இவர் குருக்ஷேத்திர போரில் யாரால் கொல்லப்பட்டார்?
2. விதுலா என்ற பெண்மணியின் பெருமை என்ன?
3. விஷ்ணு யசா இவர் யார்?
4. விஸ்வாமித்திரரின் மனைவியின் பெயர் என்ன?
5. ஹஸ்தினாபுரம் என்ற பெயர் வந்ததற்கு காரணம் என்ன?
6. நந்தா என்ற நதி எங்கு ஓடுகிறது? இதற்கு அருகில் உள்ள மற்றொரு நதியின் பெயர் என்ன?
7. தௌம்யர் யாருக்குத் தம்பி? எந்த தீர்த்தத்தில் தபஸ் செய்தார்? யாருக்கு புரோகிதராக இருந்தார்?
8. தாத்ரேயிகா இந்த அம்மையார் யார்?
9. தர்ம தேவதையின் முக்கியமான மூன்று புத்திரர்கள் யார்? ஆணி மாண்டவர் சாபத்தால் தர்மதேவதை யாராகப் பிறந்தார்?
10. பாண்டவர்கள் துர்கா தேவியை எந்தெந்த சமயங்களில் ப்ரார்த்தித்தார்கள்?

"மதுரமுரளி" சந்தா
5 ஆண்டு - ரூ 600
3ஆண்டு - ரூ 360
1 ஆண்டு - ரூ 120
For Details:
**+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.



**GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA TRUST**

**"எல்லோரும் வாருங்கள், பயன் இருக்குது பாருங்கள்"**

**2013 ஆங்கில புத்தாண்டு மஹாமந்திர கூட்டு ப்ரார்த்தனை**

ஜனவரி 1, 2013
செவ்வாய்க்கிழமை

**TIME:**
**6 - 8.30PM**

இடம்: **D.K.M.** பெண்கள் கல்லூரி, சாய்நாதபுரம்,
**வேலூர்**

அனைவரும் வருக! திருவருள் பெறுக!!


ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.